C.C.No.165/2021 09.04.2026

RW 2 **சாந்தி க/பெ. குமரன்**
( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).
**அரசுதரப்பில் குறுக்குவிசாராண**

எனது சொந்த ஊர் எது என்றால் காரைக்குடி. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் சிவகங்கையில் எனது மகள் வீட்டில் குடியிருந்து வருகிறேன். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் எனக்கு 4 குழந்தைகள் அதில் 3 பெண் குழந்தை 1 ஆண்குழந்தை. எனது கணவர் எங்கு உள்ளார் என்றால் 15 வருடத்திற்கு முன்னர் பிரிந்துவிட்டோம். எனது மூத்த பெண் பெயர் பானு ஈஸ்வரி, அவருக்கு வயது என்ன என்றால் 1995ம் வருடம் பிறந்தவர். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சுமார் 15 வருடம் வீட்டு வேலை பார்த்து வந்தேன், வெளிநாட்டில் வேலைக்கு சென்றுள்ளேன். எந்த வருடம் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றேன் என்றால் 2014ம் வருடம். எந்த வருடம் இந்தியாவிற்கு திரும்பினேன் என்றால் அதே வருடம் இந்தியாவிற்கு திரும்பினேன். வீட்டு வேலைக்கு எவ்வளவு சம்பளம் வரும் என்றால் மாதம் ரூ.15000/-. நான் எனது 4 குழந்தைகளை நன்றாக படிக்க வைத்துள்ளேன் என்றால் இல்லை, 8ம் வகுப்பு வரை படிக்க வைத்துள்ளேன். எங்கள் குடும்ப செலவிற்கு மாதம் ரூ.10000 தேவைப்படுமா என்றால் இல்லை, ஒரு நாளுக்கு 100 ருபாய்தான் தேவை. நான் வெளிநாட்டில் எத்தனை மாதங்கள் இருந்தேன் என்றால் 4, 5 மாதங்களிலேயே திரும்பிவிட்டேன்.

2) என்னிடம் காட்டப்படும் எமாசஆ3 நான் தாக்கல் செய்த ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி என்ன

என்றால் 14.07.2021, 15.07.2021, 18.07.2021 என்று உள்ளது. CC 162/21 வழக்கை தவிர மற்ற வழக்குகளான CC 163/21, CC 164/21, CC 165/21 வழக்குகளின் சம்பவ தேதி மேற்கூறிய எதசாஆ3 குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் நடந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்து எதசாஆ3 இந்த வழக்கு தண்டனையிலிருந்து தப்பிப்பதற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இந்த வழக்குகளில் நான் சிறையில் இருந்தேன் என்றால் சுமார் 40லிருந்து 50 நாட்கள் சிறையில் இருந்தேன். அந்த 4 வழக்குகள் ஒரே நேரத்தில் என் மீது போடப்பட்ட வழக்குகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னையும், எனது மகன் 1ம் எதிரி நாகராஜனையும் போலீசார் அழைத்து வந்த சமயத்திலிருந்தே எங்களுடன் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். உண்மையிலேயே எங்கள் நகையை போலீசார் கைப்பற்றி பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தால் வழக்கு சொத்தை புகார்தாரரால் மனு தாக்கல் செய்துடன், தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நீதிமன்றத்தில் பெற்றிருப்பேன், அவ்வாறு இல்லாததால்தான் நான் மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரைண கூறிய விவரங்கள் அனைத்தும் பின்னிட்டு சொல்லி கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் உண்மையானதாக இருந்தால் போலீசார் உயர் அதிகாரிகளிடம் மனு தாக்கல் செய்திருப்பேன், அது உண்மை இல்லை என்பதால்தான் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அவர்கள் எங்களை மிரட்டினார்கள். நான் இந்த வழக்கில் முதல் விசாரணை சாட்சியம் அளித்த பின்பு 3ம் எதிரி கோபிகண்ணன் அளித்த சாட்சியத்தை பார்வையிட்டேனா

என்றால் இல்லை, எங்களுக்கும், 3ம் எதிரி கோபிகண்ணனுக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை. 3ம் எதிரி கோபிகண்ணன் முதல்விசாரணையில் எனது மகன் 1ம் எதிரி நாகராஜன் கொடுத்த 2,1/2 பவுன் தங்க செயினை மாற்றி 3 பவுனாக பெற்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல, நான் தான் கோபிகண்ணனிடம் 2,1/2 பவுன் கொடுத்த 3 பவுன் நகை பெற்றுக்கொண்டேன். நான் கொடுத்த சாட்சியங்கள் அனைத்தும் முற்றிலும் பின்னிட்டு தயார் செய்த ஆவணங்கள் என்பதற்கு எனது சாட்சியமும், கோபிகண்ணனின் சாட்சியம் மூலம் தெரிகிறது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட நகைகள் என்னுடையதாக இருந்தால் இந்த வழக்கின் புகார்தாரரிடம் நகையை இந்நீதிமன்றத்தில் கொடுத்தபோது நான் வழக்கறிஞர் மூலம் ஆட்சேபணை தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல, பண வசதி இல்லாததால் மனு தாக்கல் செய்யவில்லை.

3) நான் கூறிய விவரங்கள் அனைத்தும் வழக்கின் விசாரணைக்கு பின்பு நானும், 1ம் எதிரியான எனது மகனும் தண்டனை அடைந்துவிடுவோம் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்னையும், மற்ற எதிரிகளை காப்பாற்றும் நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.